# கரூர் நகராட்சி
## கூட்ட நடவடிக்கைகளின் எடுகுறிப்பு

2020ம் ஆண்டு செப்டம்பர் 23ம் நாள் புதன்கிழமை மாலை 4.25மணிக்கு கரூர் நகராட்சியின் மன்ற அவசரக் கூட்டம் நகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் திருமதி.கே.எம்.சுதா, பி.எஸ்.சி., எம்.ஏ., பி.எட்., அவர்கள் தலைமையில் மன்றக் கூட்டத்தில் நடைபெற்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகளின் எடுகுறிப்பு

1)தலைவர் மற்றும் தனி அலுவலர் அரசு மருத்துவகல்லூரி கரூர் அவர்களின் 22.06.2018—ம் தேதிய கடிதத்தில் கரூர் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனைக்கு அணுகுசாலையாக உள்ள சாலையின் அகலத்தினை விஸ்தரிப்பு செய்ய நடவடிக்கை எடுக்கும்படி கோரப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து கரூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட சணப்பிரட்டி கிராமம் புல எண்கள்.1481,1482,1483,1484—ல் 27.49 ஏக்கர் நிலத்தில் அமைந்துள்ள அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனைக்கு தாந்தோணி கிராமம் புல எண்.349/25—ல் நகராட்சி பராமரிப்பில் உள்ள 158.4 மீட்டர் நீளம் 9.0 மீட்டர் அகல சாலை காந்திகிராமம் திருச்சி சாலையிலிருந்து அணுகுபாதை அமைகிறது. இச்சாலையின் அகலம் போதுமானதாக இல்லாத காரணத்தினால் தாந்தோணி கிராமம் புல எண்கள்.349/39, 349/40, 349/42, 349/43, 349/54, 349/55, 349/56, 349/71, 349/72—ல் ஏற்கனவே உள்ள சாலையையொட்டி கிழக்குபுறம் 156.2 மீட்டர் நீளத்திற்கு 12.20 மீட்டர் அகலத்திற்கும் சாலையை அகலப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதில் 35.2 மீட்டர் நீளத்திற்கு நகராட்சிக்கு சொந்தமான 3 குறுக்கு சாலைகள் புழக்கத்தில் உள்ளது. மீதமுள்ள 121.0 மீட்டர் நீளத்தில் 12.20 மீட்டர் அகலத்திற்கு மட்டும் தனியார் இடங்களை நில ஆர்ஜிதம் செய்ய வேண்டியது அத்யாவசியமாகிறது. அதன்படி கீழ்காணும் புல எண்களில் அரசு மருத்துவக்கல்லூரிக்கு அணுகுசாலை விஸ்தரிப்பு செய்ய நிலம் கையகப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| வ.எண். | புல எண் | மொத்த விஸ்தீரணம் | நிலம் கையகப்படுத்த வேண்டிய விஸ்தீரணம் | வகைபாடு | உரிமையாளர் பெயர் | புலத்தில் அமைந்துள்ள கட்டிடம் மற்றும் மரங்கள் விபரம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 349/39 | 300.0 ச.மீ | 110.0 ச.மீ | ர.மனை | சசிகுமார் | RCC கட்டிடம் |
| 2 | 349/40 | 200.0 ச.மீ | 187.0 ச.மீ | ர.மனை | நரசிங்கராவ் மகன் T.N.கிருஷ்ணசாமி | RCC கட்டிடம் |
| 3 | 349/42 | 200.0 ச.மீ | 149.0 ச.மீ | ர.மனை | கோவிந்தசாமி செட்டியார் மகன் பரசுராமன் | RCC கட்டிடம் |
| 4 | 349/43 | 200.0 ச.மீ | 149.0 ச.மீ | ர.மனை | — | காலி மனை |
| 5 | 349/54 | 200.0 ச.மீ | 222.0 ச.மீ | ர.மனை | — | காலி மனை |
| 6 | 349/55 | 100.0 ச.மீ | 111.0 ச.மீ | ர.மனை | கருப்பன் செட்டியார் மகன் பெருமாள் | R.C.C, A.C.C & Mangalore tiled கட்டிடம் |
| 7 | 349/56 | 100.0 ச.மீ | 111.0 ச.மீ | ர.மனை | — | காலி மனை |
| 8 | 349/71 | 200.0 ச.மீ | 222.0 ச.மீ | ர.மனை | — | காலியிடம் |
| 9 | 349/72 | 200.0 ச.மீ | 222.0 ச.மீ | ர.மனை | சுந்தரராஜன் மகன் சந்தோஷ் கண்ணன் | RCC கட்டிடம் & ACC கட்டிடம் |
| | | மொத்தம் | 1483.0 | | | |

இதற்காக நில ஆர்ஜிதம் செய்ய மாவட்ட வருவாய் அலுவலர், கரூர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.ஆ3/13968/2018, நாள்.10.01.2019—ல் சதுர மீட்டருக்கு ரூ.3250/— எனவும், அரசாணை நிலை எண்.281 வருவாய் மற்றும் பேரிடம் மேலாண்மைத்துறை (LA-I(1)) நாள்.07.09.2017—ன்படி நேரடி பேச்சுவார்த்தை மூலம் கையகப்படுத்தும் நிலங்களுக்கு நிலமதிப்பின் 225 சதவீதம் வரை வழங்கலாம் என ஆணைகள் வழங்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் இந்நிலங்களின் மதிப்பின் 225 சதவீதமான ரூ.1,08,44,500/— ஆகும். மேலும் செயற்பொறியாளர்,

பொதுப்பணித்துறை, கரூர் அவர்களின் **04.01.2019ம்** தேதிய கடிதத்தின்படி நில ஆர்ஜிதம் செய்யப்படவுள்ள இடத்தில் உள்ள பழைய கட்டிடங்களின் மதிப்பு ரூ.**57.96** இலட்சம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, நில ஆர்ஜிதம் செய்யவும், நில ஆர்ஜிதம் செய்யப்படவுள்ள இடத்தில் உள்ள பழைய கட்டிடங்களின் மதிப்பு என மொத்தம் இரண்டு இனங்களுக்கான தோராய செலவினம் ரூ.**166.41** இலட்சம் தொகையினை அரசு மருத்துவக்கல்லூரிக்கு போக்குவரத்து அத்யாவசியத்தினை கருதி அரசின் சிறப்பு திட்டத்தின்கீழ் முழு மான்யமாக வழங்கவும், மேற்கண்ட பணிகளை செய்திட நிர்வாக அனுமதியும் வழங்கும்படியும் **21.01.2019**–ம் தேதிய கடிதத்தில் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக, அரசாணை (நிலை) எண்.**84**, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA.V(1))துறை, நாள்.**12.08.2020**–ல் நில ஆர்ஜிதம் செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனினும், நிலம் ஆர்ஜிதம் செய்வதற்குண்டான செலவினம் தொகை குறித்து நிதி ஒதுக்கீடு ஏதும் குறிப்பிடப்படவில்லை. ஏற்கனவே மாவட்ட வருவாய் அலுவலர், கரூர் அவர்களால் நிலம் கையகம் செய்யப்படவுள்ள **1483.0** ச.மீ நிலத்திற்கு ரூ.**1,08,44,500/–** என நிலமதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டு ஒரு வருட காலமாவதால் **12** சதவீதம் கூடுதல் நிலமதிப்பு எடுத்துக்கொள்ளப்பட்டு (**1,08,44,500** + **13,01,340** = **1,21,45,840**) தற்போதைய விலையில் நிலமதிப்பாக ரூ.**1,21,45,840/–** எனவும் பழைய கட்டிடங்களின் மதிப்பு ரூ.**57.96**இலட்சம் என மொத்தம் ரூ.**1,79,41,840/–** தொகையினை சம்மந்தப்பட்ட நில உரிமையாளர்களுக்கு இழப்பீடு தொகையாக வழங்க இந்நகராட்சியில் போதுமான நிதி ஆதாரம் இல்லாத காரணத்தினால் சிறப்பு திட்டத்தின்கீழ் முழு மான்யமாக வழங்க நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் வழியாக அரசை கேட்டுக்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். (எப்1/5782/2018)

தீர்மான எண்.2455 அனுமதிக்கப்பட்டது.

2)அரசாணை எண்.**92** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.**03.07.2007**ன்படி **9** ஆண்டு குத்தகை முடிவுற்ற கடைகளுக்கு வாடகை மறுநிர்ணயம் செய்யப்படவேண்டுமென உத்திரவிடப்பட்டதின் பேரில் கரூர் நகராட்சிக்கு பாத்தியப்பட்ட குத்தகை இன கடைகளில் **9** ஆண்டுகள் குத்தகை முடிவுற்ற **269** கடைகளுக்கு **01.07.2016** முதல் வாடகை உயர்வு செய்யப்பட்டதில் **42** கடை உரிமதாரர்களால் வாடகை உயர்வினை ஆட்சேபித்து சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் **WP(MD)No: 4448 to 4480, 4468 to 4875 மற்றும் 5253/2018 தீர்ப்புரை நாள் 29.11.2018**இந்நகராட்சிக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு தீர்ப்பில் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், நகராட்சி ஆணையர், நகராட்சி பொறியாளர், நகரமைப்பு அலுவலர் மற்றும் வருவாய் அலுவலர் அடங்கிய குழுவில் சம்மந்தப்பட்ட கடை உரிமதாரர்களை நேரில் வரவழைத்து கோரிக்கைகளை பரிசீலித்து வாடகை மறு நிர்ணயம் செய்து கொள்ள உத்திரவிடப்பட்டுள்ளதற்கிணங்க சம்மந்தப்பட்ட கடை உரிமதாரர்களின் கோரிக்கைகளை மேற்படி குழுவால் **22.11.2019**ம் தேதியில் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகத்தில் நடைபெற்ற குழு கூட்டத்தில் கீழ்கண்ட கடைகளுக்கு **01.07.2016** முதல் மறுநிர்ணயம் செய்யப்பட்ட வாடகையினை உறுதி செய்து தீர்மானிக்கப் பட்டுள்ளது.

மேற்படி உறுதி செய்யப்பட்ட வாடகையினை எதிர்த்து கடை உரிமதாரர்களால் மீண்டும் இந்நகராட்சிக்கு எதிராக சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் **WP(MD) No: 26256, 26288,26292,26294,26297 to 26317,26323,26325,26327 to 26329, 26336, 26337, 26341,26344,26346,26429,26432,26435 to 26437/2019 தீர்ப்புரை நாள் 12.12.2019** ன் படி தஞ்சாவூர் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்கள் தலைமையில் கண்காணிப்பு குழு அமைத்து வாடகை மறு நிர்ணயம் செய்ய உத்திரவிடப்பட்டது.

அதன்படி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண் 14/2020/ஆர்2020/ஆர்2 நாள் 10.01.2020ன்படி நகராட்சி நிர்வாக இயக்குநர், தஞ்சாவூர் அவர்களை நியமனம் செய்யப்பட்டு இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட கடைகளை ஆய்வு செய்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,தஞ்சாவூர் அவர்களின் ந.க.எண் 138/2020/அ2, நாள்.18.01.2020ன்படி அறிக்கை கீழ்கண்டவாறு வாடகை மறு நிர்ணயம் செய்யப்பட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

அவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்ட வாடகையினை சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளை வழக்கு எண்.**WP(MD)No.26256, 26288, 26292, 26294, 26297 to 26317, 26323, 26325,**

**26327 to 26329, 26336, 26337, 26341, 26344, 26346, 26429, 26432, 26435 to 26437/2019** தீர்ப்பாணை நாள். **29.01.2020**.ன்படி ஏற்று இந்நகராட்சிக்கு சாதகமாக மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளை உத்திரவிடப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,தஞ்சாவூர் அவர்களின் ந.க.எண் 138/2020/அ2, நாள் **18.01.2020.** படி கீழ்கண்ட வாறு வாடகை நிர்ணயம் செய்யப்பட்டு மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் தீர்ப்பாணை நாள் 29.01.2020ன் உறுதி செய்யப்பட்ட வாடகையினை செலுத்த கோரி இவ்வலுவலகம் மூலம் சம்மந்தபட்டவர்களுகக்கு அறிவிப்பு வழங்கப்பட்டது.

இந்த அறிவிப்பினை எதிர்த்து சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளை வழக்கு எண். **WP(MD)No.7895 முதல் 7906/2020தீர்ப்பாணை நாள் 23.07.2020.** சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளை வழக்கு எண் **WP(MD)No.8821,8822,8827,8832,8833/2020 தீர்ப்பாணை நாள்.06.08.2020**ன்படி தற்போது தமிழகத்தில் கொரோனா வைரஸ் பாதிப்பு காரணமாக வியாபாரம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் வாடகை உயர்வு சம்மந்தமாக நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களிடம் மேல்முறையீடு செய்துள்ளதாகவும் அதில் இறுதி உத்தரவு வரும் வரையில் மேல்நடவடிக்கையினை நிறுத்தி வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

எனவே கரூர் டவுன் பேருந்து நிலைய உள் மற்றும் வெளிபுற உரிமையாளர் சங்கத்தின் மூலம் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களிடம் செய்யப்பட்ட மேல்முறையீடு ந.க.எண். 14/2020/ஆர்2 நாள்.14.09.2020. ன் படி நிராகரிக்கப்பட்டு உத்தரவு வரப்பெற்றுள்ளதால் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,தஞ்சாவூர் அவர்களின் ந.க.எண் 138/2020/அ2, நாள் **18.01.2020.** படி கீழ்கண்டவாறு வாடகை நிர்ணயம் செய்யப்பட்டு மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் தீர்ப்பாணை நாள் 29.01.2020ன் உறுதி செய்யப்பட்ட வாடகையினை 01.07.2016 முதல் நிர்ணயம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளை வழக்கு எண்.**WP(MD)No.26256, 26288, 26292, 26294, 26297 to 26317, 26323, 26325, 26327 to 26329, 26336, 26337, 26341, 26344, 26346, 26429, 26432, 26435 to 26437/2019**தீர்ப்பாணை நாள். **29.01.2020** தீர்ப்பானையின் நகல் **16.03.2020** யில் இவ்வலுலவத்திற்க்கு கிடைக்கப்பெற்றமைக்கும், **24.03.2020** முதல் தமிழகம் முழுவதும் **144** தடைஉத்திரவு பிறப்பிக்கப்பட்டதால் சம்மந்தப்பட்ட கடைகளின் உரிமைதாரர்களுக்கு வாடகை தொகையினை செலுத்த கோரி **19.06.2020** ல் அறிவிப்பு வழங்கப்பட்டதில் ஏற்பட்ட காலதாமதத்திற்க்கும் மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளை வழக்கு எண். **WP(MD)No.7895 முதல் 7906/2020தீர்ப்பாணை நாள் 23.07.2020.** சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளை வழக்கு எண் **WP(MD)No.8821,8822,8827,8832,8833/2020** தீர்ப்பாணை நாள் 06.08.2020.–ன்படி தற்போது தமிழகத்தில் கொரோனா வைரஸ் பாதிப்பு காரணமாக வியாபாரம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் வாடகை உயர்வு சம்மந்தமாக நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னைஅவர்களிடம் மேல்முறையீடு செய்துள்ளதாகவும் அதில் இறுதி உத்தரவு வரும் வரையில் மேல்நடவடிக்கையினை நிறுத்தி வைக்க நீதி மன்றம் உத்தரவிடப்பட்டுள்ளதினை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

கரூர் டவுன் பேருந்து நிலைய உள் மற்றும் வெளிபுற உரிமையாளர் சங்கத்தின் மூலம் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களிடம் செய்யப்பட்ட மேல்முறையீடு கடிதத்திற்கு ந.க.எண். 14/2020/ஆர்2 நாள்.14.09.2020.–ன்படி நிராகரிக்கப்பட்டு உத்தரவு வரப் பெற்றுள்ளதனை மன்றம் அனுமதிக்கலாம்.

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,தஞ்சாவூர் அவர்களின் தலைமையிலான கண்காணிப்பு குழு நாள்.18.01.2020யில் நிர்ணயம் செய்யப்பட்ட வாடகைபடியும், சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளை வழக்கு எண். **WP(MD)No.26256, 26288, 26292, 26294, 26297 to 26317, 26323, 26325, 26327 to 26329, 26336, 26337, 26341, 26344, 26346, 26429, 26432, 26435 to 26437/2019 தீர்ப்பாணை நாள். 29.01.2020**ன்படி உறுதி செய்யப்பட்ட வாடகையினை 01.07.2016 முதல் நிர்ணயம் செய்து வசூல் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட 42 கடைகளுக்கு மறுநிர்ணயம் செய்யப்பட்ட வாடகை விவரம்

| வ.எண் | வரிவிதிப்பு எண்/ கடை எண்/ அமைவிடம் | உரிமதாரர் பெயர்/ வழக்கு தொடர்ந்தவர்கள் பெயர் | 30.06.2016 வரை மறுநிர்ணயத்திற்கு முன்பு உள்ள வாடகைத் தொகை | 01.07.2016 முதலான காலத்திற்கு 15.02.2017 ல் மண்டல கண்காணிப்பு குழுவால் நிர்ணயம் செய்யப்பட்ட வாடகை | சென்னை உயர்நீதிமன்ற மதுரைகிளை வழக்கு எண். WP(MD)/4448/ 2018 ன் உத்தரவுபடி 22.11.2019ல் சேலம் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்கள் தலைமையிலான குழுவால் நிர்ணயம் செய்யப்பட்ட வாடகை | சென்னை உயர்நீதிமன்ற மதுரைகிளை வழக்கு எண். WP(MD)/26256/2019 நாள்.12.12.2019 ன் உத்தரவுபடி 18.01.2020 ல் தஞ்சாவூர் RDMA அவர்கள் தலைமையிலான குழுவால் நிர்ணயம் செய்யப்பட்டு, சென்னை உயர்நீதிமன்ற மதுரைகிளை வழக்கு எண். WP(MD)/26256/2019 நாள்.29.01.2020 உறுதி செய்யப்பட்ட வாடகை |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1 | 20000322 /23/ புதிய பேருந்து நிலையம் | திரு. R. ராசு / R. ராசு | 1739 | 7500 | 7500 | 7000 |
| 2 | 20000212/2/ கோவை சாலை | திரு. P.K. ராஜேந்திரன்/ திரு. P.K. ராஜேந்திரன் | 1042 | 18000 | 18000 | 18000 |
| 3 | 20000045/5/ புதிய பேருந்து நிலையம் வடக்குக்கடை | திரு. G. பாஸ்கரன்/ திரு. G. பாஸ்கரன் | 4741 | 11500 | 11500 | 12000 |
| 4 | 20000043/3/ புதிய பேருந்து நிலையம் வடக்குக்கடை | திரு. K. முனுசாமி/ திரு. K. முனுசாமி | 2919 | 11500 | 11500 | 12000 |
| 5 | 20000338/35/ புதிய பேருந்து நிலையம் | திரு. U.R. சடகோபால்/ திரு. S. சுப்பிரமணி | 2161 | 20000 | 20000 | 17500 |
| 6 | 20000336/33/ புதிய பேருந்து நிலையம் | திரு. P. ராமசாமி/ திரு. P. ராமசாமி | 1447 | 20000 | 20000 | 18000 |
| 7 | 20000321/22/ புதிய பேருந்து நிலையம் | திரு. G. மாதேஸ்வரன்/ திரு. G. மாதேஸ்வரன் | 3405 | 25000 | 25000 | 25000 |
| 8 | 20000215/5/ கோவை சாலை | திரு. P. காளியப்பன்/ திரு. P. காளியப்பன் | 1042 | 18000 | 18000 | 18000 |
| 9 | 20000331/32/ புதிய பேருந்து நிலையம் | திரு. P.G. துரை/ திரு. P.G. துரை | 9223 | 25000 | 25000 | 25000 |
| 10 | 20000218/8/ கோவை சாலை | திரு. செல்வராஜ்/ திரு. செல்வராஜ் | 1042 | 18000 | 18000 | 18000 |
| 11 | 20000211/1/ கோவை சாலை | திரு. S. முரளி/ திரு. S. முரளி | 1042 | 18000 | 18000 | 18000 |

| வ.எண் | வரிவிதிப்பு எண்/ கடை எண்/ அமைவிடம் | உரிமதாரர் பெயர்/ வழக்கு தொடர்ந்தவர்கள் பெயர் | 30.06.2016 வரை மறுநிர்ண யத்திற்கு முன்பு உள்ள வாடகைத் தொகை | 01.07.2016 முதலான காலத்திற்கு 15.02.2017 ல் மண்டல கண்காணிப் பு குழுவால் நிர்ணயம் செய்யப்பட்ட வாடகை | சென்னை உயர்நீதிமன்ற மதுரைகிளை வழக்கு எண். WP(MD)/4448/ 2018 ன் உத்தரவுபடி 22.11.2019ல் சேலம் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்கள் தலைமையிலா ன குழுவால் நிர்ணயம் செய்யப்பட்ட வாடகை | சென்னை உயர்நீதிமன்ற மதுரைகிளை வழக்கு எண். WP(MD)/26256/2019 நாள்.12.12.2019 ன் உத்தரவுபடி 18.01.2020 ல் தஞ்சாவூர் RDMA அவர்கள் தலைமையிலான குழுவால் நிர்ணயம் செய்யப்பட்டு, சென்னை உயர்நீதிமன்ற மதுரைகிளை வழக்கு எண். WP(MD)/26256/2019 நாள்.29.01.2020 உறுதி செய்யப்பட்ட வாடகை |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 12 | 20000354/46/ புதிய பேருந்து நிலையம் | திருமதி. G. ஜலஜாகுமாரி/ திருமதி. G. ஜலஜாகுமாரி | 2696 | 18000 | 18000 | 18000 |
| 13 | 20000356/48/ புதிய பேருந்து நிலையம் | திரு.S.P. மருதை/ திரு.S.P. மருதை | 5203 | 18000 | 18000 | 18000 |
| 14 | 20000357/49/ புதிய பேருந்து நிலையம் | திரு. M. கருப்பண்ணன்/ திரு. M. கருப்பண்ணன் | 3452 | 18000 | 18000 | 18000 |
| 15 | 20000041/1/ புதிய பேருந்து நிலையம் வடக்குக்கடை | திரு. K. ராமசாமி/ திரு. K. ராமசாமி | 3517 | 11500 | 11500 | 12000 |
| 16 | 20000214/4/ கோவை சாலை | திரு. K. ஜெயபால்/ திரு. K. ஜெயபால் | 1042 | 18000 | 18000 | 18000 |
| 17 | 20000213/3/ கோவை சாலை | திரு. P. முருகேசன்/ திரு. P. முருகேசன் | 1042 | 18000 | 18000 | 18000 |
| 18 | 20000353/45/ புதிய பேருந்து நிலையம் | திரு. E. துரைசாமி/ திரு. D.மனோகரன் | 3059 | 18000 | 18000 | 18000 |
| 19 | 20000042/2/ புதிய பேருந்து நிலையம் வடக்குக்கடை | திரு. S. ஜெயராமன்/ திரு. S. ஜெயராமன் | 4198 | 11500 | 11500 | 12000 |
| 20 | 20000349/41/ புதிய பேருந்து நிலையம் | திரு. K.M. சந்திரசேகர்/ திரு. K.M. சந்திரசேகர் | 3548 | 16000 | 16000 | 18000 |
| 21 | 20000217/7/ கோவை சாலை | திரு. P. ஜெகதீசன்/ திரு. P. ஜெகதீசன் | 1042 | 18000 | 18000 | 18000 |
| 22 | 20000350/42/ புதிய பேருந்து நிலையம் | திருமதி. C. சரசு/ திருமதி. C. சரசு | 2740 | 16000 | 16000 | 18000 |

| வ.எண் | வரிவிதிப்பு எண்/ கடை எண்/ அமைவிடம் | உரிமதாரர் பெயர்/ வழக்கு தொடர்ந்தவர்கள் பெயர் | 30.06.2016 வரை மறுநிர்ணயத்திற்கு முன்பு உள்ள வாடகைத் தொகை | 01.07.2016 முதலான காலத்திற்கு 15.02.2017 ல் மண்டல கண்காணிப்பு குழுவால் நிர்ணயம் செய்யப்பட்ட வாடகை | சென்னை உயர்நீதிமன்ற மதுரைகிளை வழக்கு எண். WP(MD)/4448/ 2018 ன் உத்தரவுபடி 22.11.2019ல் சேலம் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்கள் தலைமையிலான குழுவால் நிர்ணயம் செய்யப்பட்ட வாடகை | சென்னை உயர்நீதிமன்ற மதுரைகிளை வழக்கு எண். WP(MD)/26256/2019 நாள்.12.12.2019 ன் உத்தரவுபடி 18.01.2020 ல் தஞ்சாவூர் RDMA அவர்கள் தலைமையிலான குழுவால் நிர்ணயம் செய்யப்பட்டு, சென்னை உயர்நீதிமன்ற மதுரைகிளை வழக்கு எண். WP(MD)/26256/2019 நாள்.29.01.2020 உறுதி செய்யப்பட்ட வாடகை |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 23 | 20000325/26/ புதிய பேருந்து நிலையம் | திரு. R. தங்கவேல்/ திரு. R. தங்கவேல் | 7431 | 25000 | 25000 | 25000 |
| 24 | 20000329/30/ புதிய பேருந்து நிலையம் | திரு. M. ராமு (எ) ராமசாமி/ திரு. M. ராமு (எ) ராமசாமி | 4708 | 25000 | 25000 | 25000 |
| 25 | 20000312/14/ புதிய பேருந்து நிலையம் | திருமதி. K. செல்லம்மாள்/ திருமதி. K. செல்லம்மாள் | 1702 | 12000 | 12000 | 12000 |
| 26 | 20000222/2/ மினி பேருந்து நிலையம் | திருமதி. M. புஷ்பா/ திருமதி. M. புஷ்பா | 3310 | 15000 | 15000 | 15000 |
| 27 | 20000323/24/ புதிய பேருந்து நிலையம் | திருமதி. நாகராஜன்/ திரு. வாசுதேவன் | 7740 | 25000 | 25000 | 25000 |
| 28 | 20000313/15/ புதிய பேருந்து நிலையம் | திரு. T.M. ராஜரத்தினம்/ திரு. T.M. ராஜரத்தினம் | 1358 | 12000 | 12000 | 12000 |
| 29 | 20000330/31/ புதிய பேருந்து நிலையம் | திருமதி. P. புவனேஸ்வரி/ திருமதி. P. புவனேஸ்வரி | 8091 | 10000 | 10000 | 7000 |
| 30 | 20000216/6/ கோவை சாலை | திரு. L. சதீஸ்குமார்/ திரு. L. சதீஸ்குமார் | 1042 | 18000 | 18000 | 18000 |
| 31 | 20000326/27/ புதிய பேருந்து நிலையம் | திருமதி. R. ரெங்கரத்தினம் அம்மாள்/ திருமதி. R. ரெங்கரத்தினம் அம்மாள் | 7183 | 10000 | 10000 | 7000 |
| 32 | 20000355/47/ புதிய பேருந்து நிலையம் | திருமதி. .K. சரஸ்வதி/ திருமதி. .K. சரஸ்வதி | 2624 | 18000 | 18000 | 18000 |

| வ.எண் | வரிவிதிப்பு எண்/ கடை எண்/ அமைவிடம் | உரிமதாரர் பெயர்/ வழக்கு தொடர்ந்தவர்கள் பெயர் | 30.06.2016 வரை மறுநிர்ண யத்திற்கு முன்பு உள்ள வாடகைத் தொகை | 01.07.2016 முதலான காலத்திற்கு 15.02.2017 ல் மண்டல கண்காணிப் பு குழுவால் நிர்ணயம் செய்யப்பட்ட வாடகை | சென்னை உயர்நீதிமன்ற மதுரைகிளை வழக்கு எண். WP(MD)/4448/ 2018 ன் உத்தரவுபடி 22.11.2019ல் சேலம் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்கள் தலைமையிலா ன குழுவால் நிர்ணயம் செய்யப்பட்ட வாடகை | சென்னை உயர்நீதிமன்ற மதுரைகிளை வழக்கு எண். WP(MD)/26256/2019 நாள்.12.12.2019 ன் உத்தரவுபடி 18.01.2020 ல் தஞ்சாவூர் RDMA அவர்கள் தலைமையிலான குழுவால் நிர்ணயம் செய்யப்பட்டு, சென்னை உயர்நீதிமன்ற மதுரைகிளை வழக்கு எண். WP(MD)/26256/2019 நாள்.29.01.2020 உறுதி செய்யப்பட்ட வாடகை |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 33 | 20000328/29/ புதிய பேருந்து நிலையம் | திருமதி. N. ராஜம்/ திருமதி. N. ராஜம் | 7142 | 25000 | 25000 | 25000 |
| 34 | 20000352/44/ புதிய பேருந்து நிலையம் | திரு.N.ராமசாமி / அமராவதி | 2895 | 16000 | 16000 | 18000 |
| 35 | 20000346/39/ புதிய பேருந்து நிலையம் | திரு. ராம் குமார்/ திரு. ராம் குமார் | 3125 | 20000 | 20000 | 18000 |
| 36 | 20000337/34/ புதிய பேருந்து நிலையம் | திரு. S.ராஜகோபால்/ திரு. S.ராஜகோபால் | 1111 | 20000 | 20000 | 17500 |
| 37 | 20000345/38/ புதிய பேருந்து நிலையம் | திரு. R.எத்திராஜ்/ திரு. R.எத்திராஜ் | 8838 | 20000 | 20000 | 18000 |
| 38 | 20000343/36/ புதிய பேருந்து நிலையம் | திரு. M. கிருஷ்ணன்/ மோகனா | 2776 | 20000 | 20000 | 18000 |
| 39 | 20000347/40/ புதிய பேருந்து நிலையம் | திருமதி. G. ஜலஜாகுமாரி/ திருமதி. G. ஜலஜாகுமாரி | 3137 | 18000 | 18000 | 18000 |
| 40 | 20000324/25/ புதிய பேருந்து நிலையம் | திரு. M. கிருஷ்ணன்/ சங்கீதா | 6212 | 25000 | 25000 | 25000 |
| 41 | 20000351/43/ புதிய பேருந்து நிலையம் | திரு. K. வைரபெருமாள்/ கண்ணன் | 3114 | 16000 | 16000 | 18000 |
| 42 | 20000344/37/ புதிய பேருந்து நிலையம் | திருமதி. P. முத்துலட்சுமி/ திருமதி. P. முத்துலட்சுமி | 2717 | 20000 | 20000 | 18000 |

மேற்படி பட்டியலில் கண்ட விபரப்படி கலம் எண் 7–ல் உறுதி செய்யப்பட்ட வாடகையினை 01.07.2016 முதல் நிர்ணயம் செய்து வசூல் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம். (அ6/2196/2016)

தீர்மான எண்.2456 அனுமதிக்கப்பட்டது.

**3)**கரூர் நகராட்சி – குத்தகை – கீழ்கண்ட கடைகளின் உரிமதாரர்கள் சம்மந்தப்பட்ட கடைகளுக்கான வாடகை தொகையினை பல முறை அறிவிப்பு கொடுத்தும், இவ்வலுவலக பணியாளர்கள் நேரடியாக தெரிவித்தும் இது வரையில் வாடகை தொகையினை செலுத்தாமல் உள்ளார்கள். எனவே நகராட்சிகளின் சட்ட விதிகளின்படியும், குத்தகை நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளின்படி கீழ்கண்ட கடைகளுக்கான உரிமம் அவைகளுக்கு எதிரே குறிப்பிட்டுள்ள நாள்முதல் ரத்து செய்து மறு ஏலம் கோர நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

கொரானா வைரஸ் காரணமாக 24.03.2020 முதல் தமிழகத்தில் 144 தடை உத்தரவு ஏற்படுத்தப்பட்டு தற்போது வரையில் அமுலில் இருந்து வருவதால் சம்மந்தப்பட்ட இந்த கடைகளின் மீது உரிமம் ரத்து செய்யப்பட்ட நாள் முதல் மறு ஏலம் நடைபெற இயலவில்லை என்ற விபரத்தினை மன்றத்தின் பார்வையும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**கடைகளின் விபரம்**

| வ.எண் | உரிமதாரர் பெயர் | வரிவிதிப்பு எண் | கடையின் விபரம் | உரிமம் ரத்து செய்யப்படும் நாள் |
|---|---|---|---|---|
| 1 | எம்.எல்.பன்னீர் செல்வம் | 082/20000429 | பேருந்து நிலைய தினசரி மார்கெட் முதல் தளம் | 24.02.2020 |
| 2 | எஸ்.பிரபாத் | 082/20000430 | பேருந்து நிலைய தினசரி மார்கெட் முதல் தளம் | 24.02.2020 |
| 3 | எஸ்.பிரபாத் | 082/20000431 | பேருந்து நிலைய தினசரி மார்கெட் முதல் தளம் | 24.02.2020 |
| 4 | எம்.அங்கமுத்து | 082/20000069 | ஆசாத் சாலை கடை எண் 6 | 24.02.2020 |
| 5 | எம்.பட்டானி | 082/20000264 | வெங்கடேஸ்வரா சாலை கட்டிட கடை எண் 17 | 24.02.2020 |
| 6 | எஸ்,பூங்கொடி | 082/10000015 | இனாம் கரூர் OHT மாடி கடை எண் 4 | 24.02.2020 |
| 7 | எம்.நடராஜ் | 082/10000017 | புது குளத்துபாளையம் தினசரி மார்கெட் 1 | 06.05.2020 |
| 8 | சி.பாஸ்கர் | 082/10000018 | இனாம் கரூர் தரை தளம் 2 | 06.05.2020 |
| 9 | எம்.மனோஜ் குமார் | 082/10000020 | இனாம் கரூர் தரை தளம் 4 | 06.05.2020 |
| 10 | எஸ்.மனோகர் | 082/10000021 | இனாம் கரூர் தரை தளம் 5 | 06.05.2020 |
| 11 | ஆர்.தனபால் | 082/10000023 | புது குளத்துப்பாளையம் தினசரி மார்கெட் 7 | 06.05.2020 |
| 12 | பி.ரமேஷ் | 082/10000019 | இனாம் கரூர் தரை தளம் 3 | 06.05.2020 |
| 13 | ஜார்ஜ் சுரேஷ்குமார் | 082/10000026 | இனாம் கரூர் தரை தளம் 10 | 06.05.2020 |
| 14 | சுதாகர் | 082/10000045 | புதுகுளத்து பாளைம் தினசரி மார்கெட் 9 | 06.05.2020 |
| 15 | பிரபு | 082/10000050 | புதுகுளத்து பாளைம் தினசரி மார்கெட் 14 | 06.05.2020 |
| 16 | செல்வம் | 082/10000054 | புதுகுளத்து பாளைம் தினசரி மார்கெட் 18 | 06.05.2020 |
| 17 | கே.கந்தசாமி | 082/10000014 | இனாம் கரூர் முதல் தளம் கடை எண் 3 | 06.05.2020 |
| 18 | வி.எஸ்.கந்தசாமி | 082/10000003 | இனாம் கரூர் தரை தளம் 1 | 06.05.2020 |
| 19 | கே.சத்தியராஜ் | 082/10000004 | இனாம் கரூர் முதல் தளம் 1 | 06.05.2020 |
| 20 | விஸ்வநாதன் | 082.100000044 | புதுகுளத்து பாளைம் தினசரி மார்கெட் 8 | 06.05.2020 |

அலுவலக குறிப்பு

**1)**நகராட்சிகளின் சட்ட விதிகள் மற்றும் குத்தகை நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளின்படி வாடகை தொகையினை செலுத்தாத மேற்கண்ட கடைகளின் உரிமத்தை அவைகளுக்கு எதிரே கண்டுள்ள நாள் முதல் ரத்து செய்து மன்றம் அனுமதிக்கலாம்.

**2)**ரத்து செய்யப்பட்ட கடைகளுக்கு நிதி இழப்பு ஏற்படா வண்ணம் உடன் மறு ஏலம் வைக்கப்பட வேண்டும் எனினும் கொரானா வைரஸ் காரணமாக 24.03.2020 முதல் தமிழகத்தில் 144 தடைஉத்தரவு ஏற்படுத்தப்பட்டு தற்போது வரையில் அமுலில் இருந்து வருவதால் சம்மந்தப்பட்ட இந்த கடைகளின் மீது உரிமம் ரத்து செய்யப்பட்ட நாள் முதல் மறு ஏலம் நடைபெற இயலவில்லை என்பதனை மன்றம் ஏற்கலாம்.

**3)**மேற்கண்ட ரத்து செய்யப்பட்ட கடைகளுக்கு தற்போது நடைமுறையிலிருந்து வரும் குத்தகை நிபந்தனைகளுக்குட்பட்டு ஏலம் நடத்திட மன்றம் அனுமதிக்கலாம். (1255/2020/அ6)

தீர்மான எண்.2457 அனுமதிக்கப்பட்டது.

**4)**கரூர் நகராட்சி வார்டு எண்.12 அருகம்பாளையம் மெயின் ரோடு கிழக்கு பகுதியில் புதிதாக 450mm பம்பிங் மெயின் லைன் அமைக்கும் பணிக்கு முதன்முறையாக 16.09.2020ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.14.50லட்சம்</u>

1. CVM & Co, Karur மதிப்பீட்டை விட 0.04% சதம் குறைவு
2. RPS Construction, Karur மதிப்பீட்டை விட 2.83 % சதம் அதிகம்

அலுவலக குறிப்பு:/

1. மேற்படி பணிக்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண்.2307, நாள். 31.07.2020 ம் தேதி ரூ.14.50 இலட்சத்தில் பொது நிதியின்கீழ் பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வழங்கப்பட்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள CVM & Co, Karur ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (இ1/3028/2020)

தீர்மான எண்.2458 அனுமதிக்கப்பட்டது.

**5)**கரூர் நகராட்சி வார்டு எண்.9 சிவலிங்க ஆசாரி தெருவில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு முதன்முறையாக 16.09.2020ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.9.25லட்சம்</u>

1. Thiru.R.Thangavel, Karur மதிப்பீட்டை விட 0.12% சதம் குறைவு
2. PRG Construction, Karur மதிப்பீட்டை விட 3.22% சதம் அதிகம்

அலுவலக குறிப்பு:

1. மேற்படி பணிக்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண்.2328, நாள். 31.07.2020 ம் தேதி ரூ.9.25 இலட்சத்தில் பொது நிதியின்கீழ் பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வழங்கப்பட்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள Thiru.R.Thangavel,Karur ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (இ1/3404/2020)

தீர்மான எண்.2459 அனுமதிக்கப்பட்டது.

**6)** கரூர் நகராட்சிக்குட்பட்ட இனாம் கரூர் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள மனித ஆய்வுக்குழிகளின் 10 எண்ணிக்கை மூடிகளை புதிததாக மாற்றும் பணி மற்றும் அரளிக் கொத்து வாய்க்காலுக்கு survey செய்து கல் ஊன்றும் பணிக்கு முதன்முறையாக 16.09.2020ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.3.50லட்சம்</u>

1. Thiru.P.Nallusamy. Karur மதிப்பீட்டை விட 0.16% சதம் குறைவு
2. Thiru.P.Pannerselvam, Karur மதிப்பீட்டை விட 3.14% சதம் அதிகம்

அலுவலக குறிப்பு:

1. மேற்படி பணிக்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண்.2323, நாள். 31.07.2020 ம் தேதி ரூ.3.50 இலட்சத்தில் பொது நிதியின் கீழ் பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வழங்கப்பட்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள Thiru.P.Nallusamy. Karur ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (இ1/3407/2020)

தீர்மான எண்.2460 அனுமதிக்கப்பட்டது.

7)கரூர் நகராட்சிக்குட்பட்ட திட்டச்சாலையில் வடபுறம் உள்ள வடிகாலினை மாற்றி கட்டவும், மற்றும் சாலையின் இருபக்கத்திலும் வடிகாலினை உயரப்படுத்தி கட்டும் பணிக்கு முதன்முறையாக 16.09.2020ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.14.50லட்சம்</u>

1. Thiru.R.Thangavel, Karur மதிப்பீட்டை விட 0.13% சதம் குறைவு
2. PRG Construction, Karur மதிப்பீட்டை விட 3.15% சதம் அதிகம்

அலுவலக குறிப்பு:

1. மேற்படி பணிக்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண்.2326, நாள். 31.07.2020 ம் தேதி ரூ.14.50 இலட்சத்தில் பொது நிதியின்கீழ் பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வழங்கப்பட்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள Thiru.R.Thangavel,Karur ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (இ1/3406/2020)

தீர்மான எண்.2461 அனுமதிக்கப்பட்டது.

8)கரூர் நகராட்சிக்கு சொந்தமான முத்துக்குமாரசாமி பேருந்து நிலையத்தின் தென்மேற்கு பகுதியில் அமைக்கப்பட்டுள்ள கட்டண கழிப்பிடத்தை பழுது பார்க்கும் பணிக்கு முதன்முறையாக 15.09.2020ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.8.50லட்சம்</u>

1. RPS Construction, கரூர் மதிப்பீட்டை விட 0.09% சதம் குறைவு
2. M,Loganathan, கரூர் மதிப்பீட்டை விட 3.08% சதம் அதிகம்

அலுவலக குறிப்பு:

1. மேற்படி பணிக்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண்.2398, நாள். 31.08.2020ம் தேதி ரூ.8.50 இலட்சத்தில் பொது நிதியில் பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வழங்கப்பட்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள RPS Construction, கரூர் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
3. மேற்படி பணிக்கு 15.09.2020அன்று ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம். (இ1/3637/2020)

தீர்மான எண்.2462 அனுமதிக்கப்பட்டது.

9) கரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.39 பவானி நகர் பகுதியில் வடிகால் வசதி இல்லாததால் இப்பகுதியிலுள்ள வீடுகளிலிருந்து வெளியேறும் கழிவுகள் சாலைகளில் தேங்கி சுகாதார சீர்கேடு ஏற்படுவதால் 190மீட்டர் நீளத்திற்கு புதியதாக வடிகால் கட்ட வேண்டியுள்ளது. எனவே, இப்பகுதி பொதுமக்களின் சுகாதார நலன் கருதி மேற்கண்ட பகுதியில் மழைநீர் வடிகால் கட்டும் பணிக்கு மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.6.40லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணிக்குண்டான செலவினத் தொகை ரூ.6.40லட்சத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம். (இ1/5426/2020)

தீர்மான எண்.2463 அனுமதிக்கப்பட்டது.

10)கரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு.33 முதல் 36 வரையுள்ள பகுதிகளில் உள்ள 96 எண்ணிக்கை சிறு மின்விசைப் பம்புகள் அனைத்து பொதுமக்களுக்கு குடிநீரில்லாத பயன்பாட்டிற்கு தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட சிறுமின்விசை பம்பு பழுதுகளை நீக்கம் மற்றும் குடிநீர் குழாய் பழுதுகளையும் செய்து பராமரிப்பு பணி மேற்கொள்ளத்தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.5.00 இலட்சத்திறகு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.5.00 இலட்சத்தை குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். (இ3/4759/2020)

தீர்மான எண்.2464 அனுமதிக்கப்பட்டது.

11)கரூர் நகராட்சிக்குட்பட்ட இனாம் கரூர் பகுதியில் வார்டு 1 முதல் 14 வரையுள்ள பகுதிகளில் 175 எண்ணிக்கை சிறு மின் விசைப் பம்புகள் உள்ளது. இதன் மூலம் அப் பகுதி பொதுமக்களுக்கு குடிநீரல்லாத பிற உபயோகத்திற்கு தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட சிறு மின் விசை பமபுகளில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகள் மற்றும் குடிநீர் குழாய்களில் ஏற்படும் பழுதுகளையும் உடனுக்குடன் சரிபார்க்க வேண்டியது அவசியமாகிறது. பணிமேற்கொள்ளத் தயார் செய்யப்பட்டமதிப்பீட்டுத் தொகை ரூ.10.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப் படுகிறது.

அலுவலகக் குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்டமதிப்பீட்டுத் தொகை ரூ.10.00 (பத்து லட்சம் மட்டும்) நகராட்சி குடிநீர் நிதியில் செலவு மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். (இ3/4762/2020)

தீர்மான எண்.2465 அனுமதிக்கப்பட்டது.

12)கரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு 47 பகுதியில் ஜீவா நகர் முதல் கருப்பக்கவுண்டன் புதுார், திண்ணப்பா நகர் வரை வடிகால் அமைக்கும் பணி மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. மேற்கண்ட பணிக்கு இடையூறாக இருக்கக்கூடிய தாழ்வழுத்த மின் கம்பம் அதற்குரிய Stud pole தாங்கு துணை கம்பம் உள்ளிட்ட கம்பங்களை 6அடி தென்புறமாக மாற்றி அமைக்க இவ்வலுவலக கடிதம் மூலம் விண்ணப்பித்தமைக்கு தமிழ்நாடு மின்சார வாரியத்திடம் இருந்து வரப்பெற்ற மேற்கண்ட பணிக்கான மதிப்பீட்டுப் பட்டியல் தொகை ரூ.63920/–ஐ மின்சார வாரியத்திற்கு செலுத்த தமிழ்நாடு மாவட்ட நகராட்சி விதிகள், பிரிவு 15–ன்கீழ் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
1)பதிவு செய்யலாம்.
2)மேற்கண்ட பணி மேற்கொள்ள தமிழ்நாடு மின்சார வாரியத்திடம் இருந்து வரப்பெற்ற மதிப்பீட்டுத் தொகை ரூ.63920/–ஐ மின்சார வாரியத்திற்கு செலுத்த நகராட்சி பொதுநிதியிலிருந்து செலுத்தியதை மன்றம் பதிவு செய்யலாம். (இ3/2045/2020)

தீர்மான எண்.2466 பதிவு செய்யப்பட்டது.

13)கரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.47—ல் முத்தலாடம்பட்டி பகுதியில் கட்டப்பட்டு வருகின்ற நாடக மேடைக்கு மேற்கூரை வழியாக செல்லக்கூடிய L.T.மின் இணைப்பு லைன் தாழ்வாக கட்டிட பணிக்கு இடையூறாக உள்ளதால் EB ACSRLT Conductor மேற்புறமாக 3 மீட்டர் அளவுக்கு இடையூறு இல்லாமல் மாற்றி அமைத்துத் தரக் கோரி தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு இவ்வலுவலக கடிதம் முலம் விண்ணப்பித்தமைக்கு மேற்கண்ட பணி மேற்கொள்ள மின் வாரியத்திடருந்து வரப்பெற்ற மதிப்பீட்டுப் பட்டியல் தொகை ரூ. 53,600/— ஐ மின்சார வாரியத்திற்கு செலுத்த தமிழ்நாடு மாவட்ட நகராட்சி விதிகள், பிரிவு15—ன்கீழ் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்க்கும் வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1)மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

2)மேற்கண்ட பணி மேற்கொள்ள தமிழ்நாடு மின்சார வாரியத்திடம் இருந்து வரப்பெற்ற மதிப்பீட்டு பட்டியல் தொகை ரூ.53600/— மன்வாரியத்திற்கு செலுத்த நகராட்சி பொது நிதியில் இருந்து செலுத்தியதை மன்றம் பதிவு செய்யலாம். (இ3/2045/2020)

தீர்மான எண்.2467 பதிவு செய்யப்பட்டது.

14)கரூர் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவுக்கு சொந்தமான TN 47 AH 8815 க்கு கிளட்சுல் ஏற்பட்டுள்ள பழுது சரிசெய்ய பொதுசுகாதார பணியினை கருத்தில் கொண்டு அவசர அவசியத்தினை முன்னிட்டு நகராட்சி சட்டவிதி 1920 பிரிவு 15ன்கீழ் அனுமதி பெற்று இவ்வாகனத்தின் தயாரிப்பு நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற M/s JAI LAXMI Auto Works and Agencies Pvt., Ltd., Karur நிறுவனத்திடமிருந்து நேரடியாக பெறப்பட்ட விலைப்புள்ளியினை ஏற்று பணியினை செய்து முடிக்கவும், அதற்கான செலவினத் தொகை ரூ.4,300/—யை நகராட்சி பொதுநிதியில் செலவினம் செய்ததை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.

அலுவலகக் குறிப்பு

1)மேற்படி வாகனத்தின் பழுது பணியினை மேற்கொள்ள நகராட்சி ஆணையர் அவர்களிடம் நகராட்சி சட்ட விதி 1920 பிரிவு 15ன்கீழ் அனுமதி பெற்ற M/s JAI LAXMI Auto Works and Agencies Pvt., Ltd., Karur நிறுவனத்தில் நேரடியாக பெறப்பட்ட விலைப்பட்டியலினை ஏற்று வேலை உத்திரவு வழங்கியதையும் பட்டியல் தொகை ரூ.4,300/—யை வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

2)மேற்படி பணிக்குண்டான செலவினத் தொகை ரூ.4,300/—யை நகராட்சியின் பொதுநிதியில் தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

3)அரசின் உச்சவரம்புக்கு மேல் செலவாகும் கூடுதல் செலவினத் தொகைக்கு அரசின் பின்னேற்பு பெற மன்றம் அனுமதிக்கலாம். (எச்5/900/2020)

தீர்மான எண்.2468 பதிவு செய்யப்பட்டது.

15)கரூர் நகராட்சிக்குட்படட வார்டு எண்.15 முதல் 23 வரை உள்ள பகுதிகளில் பொதுமக்களின் அன்றாட பயன்பாட்டிற்க்கு ஆழ்குழாய் கிணறு அமைத்து சின்டெக்ஸ் டேங்க் மூலம் சப்ளை செய்யப்பட்டு வருகிறது. ஆழ்குழாய் கிணற்றில் பொருத்தப்பட்டுள்ள சிறு மின் விசைப் பம்புகளில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்ய வேண்டியது அவசியமாகிறது. சிறு மின்விசைப் பம்பு பழுது பார்க்க போதிய பணியாளர்கள் நகராட்சியில் இல்லாத காரணத்தால் ஒப்பந்த முறையில் பணி மேற்கொள்ளத் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.7.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)மேற்படி பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.7.00 இலட்சத்தை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ளமன்றம் அனுமதி வழங்கலாம். (இ3/4340/2020)

தீர்மான எண்.2469 அனுமதிக்கப்பட்டது.

16)நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண். K.Dis.No. 6093/P3/2018 நாள்.07.04.2018ன் உத்திரவின்படி கரூர் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் திடக்கழிவுகளை அகற்றும் பணிக்கு அவுட்சோர்சிங் முறையில் 190 பணியாளர்களை கொண்டு அவர்லேண்ட் என்ஜினியரிங் ஒர்க்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனம்

மூலம் 01.10.2018 முதல் பணி நடைபெற்று வருகிறது. மேற்படி பணியானது 30.09.2020ம் தேதியுடன் இரண்டு ஆண்டு காலம் முடிவடைவதால் மேற்படி பணிகாலத்தை 01.10.2020 முதல் 30.09.2021 வரை ஓராண்டு காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்து வழங்கும்படி கோரியுள்ளார்.

எனவே, இந்நகர்மன்ற தீர்மான எண்.1701 நாள்.14.08.2019ல் அனுமதி வழங்கப்பட்டதன் அடிப்படையில் மேற்படி நிறுவனத்திற்கு இவ்வலுவலக செயல்முறை ந.க.எண்.3280/2018/எச்1 நாள்.05.09.2019ல் பணி உத்திரவு வழங்கப்பட்டு கடந்த 01.10.2018 முதல் 30.09.2020 வரை இரண்டு ஆண்டு காலம் முடிவடைவதால் மேற்படி பணியின் அவசர அவசியத்தினை கருதி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.K.Dis.No. 6093/P3/2018 நாள்.07.04.2018ன்படி மேலும் 2020–2021ம் (01.10.2020 முதல் 30.09.2021 வரை) ஆண்டிற்கு ஒப்பந்தத்தினை நீட்டிப்பு செய்து கொள்ளவும், கீழ்க்கண்டவாறு மாவட்ட ஆட்சித் தலைவர் கரூர் அவர்களின் 2019–2020 விலை விகிதமான தினக்கூலி நாள் ஒன்றுக்கு ரூ.364/– மற்றும் இதர படிகளான கீழ்கண்டவாறு வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | மாவட்ட ஆட்சியர் விலை விகிதம் 2019–2020 | 364 | 190 | 365 | 25243400 |
| 2 | பொது வருங்கால வைப்பு நிதி (EPF) Employees EPF Contribution 13.36% | 45.42 | 190 | 365 | 3149877 |
| 3 | Employers ESI Constribution 4.75% | 16.15 | 190 | 365 | 1120002.5 |
| 4 | Personnel Accidental Policies Rs.500/- per year | 1.37 | 190 | 365 | 95009.5 |
| 5 | Uniform for workers @ 2400/- per worker per year (2400/365) | 6.58 | 190 | 365 | 456323 |
| 6 | Safety equipments Rs.3600 per worker per year (3600/365) | 9.86 | 190 | 365 | 683791 |
| Administrative charges on wages (as per tender rate quoted) | | 17.50 | 190 | 365 | 1213625 |
| Rate per workers | | 460.88 | 190 | 365 | 31962028 |

அலுவலகக் குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்கண்ட பணிக்கு ஆகும் செலவினத் தொகை ரூ.3,19,62,028/–யை திடக்கழிவு மேலாண்மை திட்ட நிதியிலிருந்து அல்லது பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(எச்1/3280/2018)

தீர்மான எண்.2470 அனுமதிக்கப்பட்டது.

17)கரூர் நகராட்சி வார்டு எண்.22, கதவு எண்.875ஏ, ஜவஹர் பஜார் கரூர் என்ற முகவரியில் குடியிருந்து வரும் திரு.ஆர்.சபரிஸ் என்பவரின் குடிநீர் இணைப்பு எண்.082/208981க்கு குடிநீர் வைப்புத் தொகை இரண்டு முறை செலுத்தப்பட்டுள்ளது. ரசீது எண்.1700621 நாள்.15.09.2015ல் தொகை ரூ.9,500/– ரசீது எண்.082/01/16–17–0081156 நாள்.06.02.2017ல் ரூ.4,700/– மற்றும் இரசீது எண்.082/01/16–17/0029814க்கு தொகை ரூ.4,700/– செலுத்தப்பட்டது. ஒரே இணைப்பிற்கு இரண்டு முறை வைப்புத் தொகை செலுத்தப்பட்டுள்ளதால் கூடுதலாக செலுத்தப்பட்ட வைப்புத் தொகையினை ரூ.9,400/– திரும்ப வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
1)மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2)மேற்படி கூடுதலாக செலுத்தப்பட்ட வைப்புத் தொகையினை நகராட்சி குடிநீர் நிதி வைப்புத் தொகையிலிருந்து வழங்க மன்றம் அனுமதி அளிக்கலாம். (இ2/1180/2020)

தீர்மான எண்.2471 அனுமதிக்கப்பட்டது.

18)கரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.42 மட்டப்பாறை பகுதியிலுள்ள 50 குடியிருப்புக்கு நகராட்சி காவேரி குடிநீர் திட்டம் இல்லாத காரணத்தினால் இப்பகுதி மக்களுக்கு குடிநீர் வசதி இல்லாமல் உள்ளது. எனவே ஜல்லிவாடா நாயக்கனுார் பகுதியிலுள்ள நகராட்சி குடிநீர் பகிர்மானக் குழாயிலிருந்து மட்டப்பாறை பகுதி வரை சுமார் 1650 மீட்டர் நீளத்திற்கு குடிநீர் பகிர்மானக்குழாய்கள் அமைத்து மட்டப்பாறை பகுதி மக்களுக்கு குடிநீர் விஸ்தரிப்பு செய்யும் 13 பணிக்கு மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.5.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம்அனுமதிக்கலாம்.
2 மேற்படி பணிக்குண்டான செலவினத் தொகை ரூ.5.50 இலட்சத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம். (இ1/5427/2020)

தீர்மான எண்.2472 அனுமதிக்கப்பட்டது.

19)கரூர் நகராட்சி வார்டு எண்.19 கௌரிபுரம் விஸ்தரிப்பு மற்றும் வார்டு எண்.20 சின்னாண்டாங்கோவில் முதல் குறுக்குத் தெருவில் இரண்டு சிறுபாலங்கள் மற்றும் மழை நீர் வடிகால் அமைக்கும் பணிக்கு முதன்முறையாக 16.09.2020ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.2.75லட்சம்</u>

1. திருமதி. எம்.ஹேமலதா, கரூர் மதிப்பீட்டை விட 0.22% சதம் குறைவு
2. திரு.ஆர்.தங்கவேல், கரூர் மதிப்பீட்டை விட 3.13 % சதம் அதிகம்

அலுவலக குறிப்பு:

1. மேற்படி பணிக்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண்.2336, நாள். 31.07.2020 ம் தேதி ரூ.2.75 இலட்சத்தில் பொது நிதியின்கீழ் பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வழங்கப்பட்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள **திருமதி. எம்.ஹேமலதா, கரூர்** ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (இ1/3265/2020)

தீர்மான எண்.2473 அனுமதிக்கப்பட்டது.

20)கரூர் நகராட்சிக்குட்பட்ட வாங்கல் சாலை முதல் புகளூர் ரோடு வரை இணைப்பு சாலை அமைப்பதற்கு சாலையினை Total Station Method மூலம் Jiopography survey செய்தல், மண் பரிசோதனை செய்தல், வரைபடங்கள் மற்றும் வடிவமைப்பு செய்து கொடுக்க தனியார் கலந்தாலோசகர் மூலம் மேற்கொள்ளும் பணிக்கு முதன்முறையாக 16.09.2020ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.4.00லட்சம்</u>

1. Manasarovar RB & Building Engineers, Salem மதிப்பீட்டை விட 0.66% சதம் குறைவு
2. Vasanthavel Consultant, Salem மதிப்பீட்டை விட 3.81% சதம் அதிகம்

அலுவலக குறிப்பு:

1. மேற்படி பணிக்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண்.2324, நாள். 31.07.2020ம் தேதி ரூ.4.00 இலட்சத்தில் நகராட்சி பொது நிதியில் பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வழங்கப்பட்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள Manasarovar RB & Building Engineers, Salem ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (இ1/3402/2020)

தீர்மான எண்.2474 அனுமதிக்கப்பட்டது.

21)கொரோனா நோய் தடுப்பு எச்சரிக்கை காரணமாக தேசிய ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாலும், இந்நகராட்சி பகுதியில் கொரோனா வைரஸ் வேகமாக பரவி வருவதாலும், காய்கறிகள் வாங்குவதற்கு கூடும் மக்கள் நெரிசலை தவிர்க்கும்பொருட்டு அவர்கள் இருக்குமிடத்திற்கே கொண்டு சென்று விற்பனை செய்வதை பொதுமக்கள் அறியும்வண்ணம் மாவட்ட ஆட்சித் தலைவர் கரூர் அவர்களின் ஆய்வுக் கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டதற்கிணங்க, கரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் பரவாமல் முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள காய்கறிகள் வாங்குவதற்கு கூடும் மக்கள் நெரிசலை

தவிர்க்கும்பொருட்டு அவர்கள் இருக்குமிடத்திற்கே கொண்டு சென்று விற்பனை செய்வதையும், பொதுமக்கள் சமூக இடைவெளியை கடைபிடிப்பதின் அவசியத்தை வலியுறுத்தியும் அனைத்து பகுதிகளிலும் ஆட்டோ மூலம் (12.04.2020 மற்றும் 06.05.2020) விளம்பரம் செய்யப்பட்டதற்கு விலைப்புள்ளி கோரப்பட்டது. கீழ்கண்டுள்ளவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு.

| வ. எண். | விவரம் | நாள் ஒன்றுக்கு/ ஆட்டோ ஒன்றுக்கு | அறிஞர் அண்ணா விளம்பர நிறுவனம் அண்டு சவுண்ட் சர்வீஸ், கரூர் | அன்னை சத்யா சவுண்ட் சர்வீஸ், கரூர் | மணி சவுண்ட் சர்வீஸ், கரூர் |
|---|---|---|---|---|---|
| 1 | ஆட்டோவில் ஒலிபெருக்கி, மைக்செட், டீசல் உட்பட | ஒன்றுக்கு | ரூ.1,500/– | ரூ.2,000/– | ரூ.2,200/– |

எனவே கரூர் நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 48 வார்டுகளில் உள்ள பொதுமக்கள் அறியும்வகையில் ஆட்டோ மூலம் விளம்பரம் செய்ய பொதுமக்களின் நலன் மற்றும் பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.3336/ஜே2/2020–9 நாள்.02.04.2020ல் தெரிவித்துள்ளதின் அடிப்படையில் நேரடியாக விலைப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள அறிஞர் அண்ணா விளம்பர நிறுவனம் அண்டு சவுண்ட் சர்வீஸ், கரூர் அவர்களின் விலைவிபரம் உள்ளூர் மார்க்கெட் விலைவிபரத்திற்கு ஏற்ப இருப்பதால் ஆட்டோ விளம்பரம் செய்வதற்கான செலவினத்தொகை ரூ.37,500/– யை பொதுநிதி அல்லது கொரோனா வைரஸ் தடுப்பு நிவாரண நிதியின்கீழ் செலவினம் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். (எச்1/1605/2020)

தீர்மான எண்.2475 அனுமதிக்கப்பட்டது.

22)அரசாணை (நிலை) எண்.69 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ந.நி3) துறை நாள்.04.05.1998ன்படி இந்நகராட்சியின் வார்டு எண்.1 முதல் 48 வரை உள்ள பல்வேறு வகையான 9321 எண்ணிக்கையிலான தெருவிளக்குகளை கடந்த 2018 – 2019ம் ஆண்டில் தனியார் மூலம் தெருவிளக்குகள் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள ரூ.122.38 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து நகர்மன்ற தீர்மான எண்.951, நாள்.05.07.2018ன் ஒப்புதல் பெற்ற மதிப்பீட்டின்படி தனியார் வசம் தெருவிளக்குகளை ஒப்படைத்து பராமரிக்கும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி படிவத்திற்கு நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.13899/2016/DO1, நாள்.14.08.2018ல் அனுமதி பெற்று 12.09.2018ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற M/s PRG Construction, Karur என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்ற தீர்மான எண்.1109, நாள்.15.10.2018ல் ஏற்றுக்கொள்ளப்பட்டு, இவ்வலுவலக செயல்முறைகள் ந.க.எண்.10042/இ3/2017, நாள்.20.09.2018ன்படி 25.09.2018 முதல் 24.09.2019 வரையிலான காலத்திற்கு தெருவிளக்கு பராமரிக்கும் பணியினை ஒப்படைக்கப்பட்டது.

மேற்படி ஒப்பந்ததாரரின் ஒரு வருட காலத்திற்கான தெருவிளக்குகள் பராமரிப்பதற்கான காலம் முடிவு பெற்றதினால் தனது ஒப்பந்தப்பணியினை மேலும் ஓராண்டு காலத்திற்கு நீட்டித்து உத்திரவு வழங்குமாறு ஒப்பந்ததாரர் தனது 04.09.2019ம் தேதிய கடிதத்தில் கோரியுள்ளார். மேலும் மேற்படி ஒப்பந்ததாரர் தெருவிளக்குகளை பராமரிக்கும் ஒரு வருட காலத்தில் தெருவிளக்குகள் பராமரிக்கும் பணியினை சீராக பராமரித்து வந்ததின் அடிப்படையிலும், மின் கண்காணிப்பாளர் குறிப்பின் படியும் தெருவிளக்குகள் இயக்குதல் பராமரிப்பு பணிக்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரி ஒப்பந்ததாரரை தேர்வு செய்து பணியினை ஒப்படைத்து மேற்கொள்வது மூன்று ஆண்டுகள் வரை அவரது பணியின் தன்மை மற்றும் நடவடிக்கை குறித்து நீட்டித்து கொள்ள வழிமுறைகள் உள்ளதால் மேற்படி ஒப்பந்ததாரரை தொடர்ந்து ஓராண்டு காலத்திற்கு 25.09.2019 முதல் 24.09.2020 வரையிலான காலத்திற்கு தெருவிளக்குகள் பராமரிக்கும் பணியினை 12.09.2018 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் விலை விபரப்படி தெருவிளக்கு பராமரிப்பு பணியினை ஒப்படைக்க நகர்மன்ற தீர்மான எண்.1109 நாள்.15.10.2018ன்படி பணியானது ஒப்படைக்கப்பட்டது.

மேற்படி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தகாலம் 25.09.2020ம் தேதியுடன் முடிவடைய உள்ளதால் தொடர்ந்து தெருவிளக்கு பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளவும் மேற்படி ஒப்பந்ததாரர் தனது 10.09.2020ம் தேதிய கடிதத்தில் கால நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்க கோரியதின்படி ஒப்பந்ததாரர் 12.09.2018 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் விலை விவரத்தின் அடிப்படையில் மேலும் ஆறு மாத காலத்திற்கு மட்டும் 25.09.2020 முதல் 24.03.2021 முடிய தெருவிளக்குகள் பராமரிக்கும் பணியினை PRG Construction, Karur ஒப்பந்ததாரர் மூலம் தெருவிளக்குகள் பராமரிக்கும் பணியினை மேற்கொள்வதற்கும், அதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.57.87லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. நகராட்சியில் உள்ள தெருவிளக்குகள் பராமரிக்கும் பணி 6மாத காலத்திற்கு (25.09.2020 முதல் 24.03.2021 வரையிலான காலத்திற்கு) தெருவிளக்குகள் பராமரிக்கும் பணியினை 12.09.2018 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் விலை விபரத்திற்கு பராமரிப்பு பணிகளை ஒப்படைக்கவும் அதற்காக ரூ.57.87இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டின்படி பணியினை ஒப்பந்ததாரர் PRG Construction, Karur அவர்களிடம் ஒப்படைத்து பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2 மேற்படி பணிக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.57.87 இலட்சத்திற்கு நகராட்சி பொது நிதியின் மூலம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்.2476 அனுமதிக்கப்பட்டது.

தனி அலுவலர்
கரூர் நகராட்சி